Date: 19.11.2025
DVC.No. 12/2025
PW1 – சூசை சகாய லீமா ரோஸ், க/பெ. ஏசு பாக்கியராஜ்

**<u>குறுக்குவிசாரணை</u>**

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனாம்சம் கேட்டு இந்த மனுமை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை நான் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய திருமணத் தேதி என்ன என்றால் 05.05.2008ம் தேதியில் திருமணம் நடைபெற்றது. என்னுடைய திருமணத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் கூலிவேலை செய்தார் என்றால் சென்ட்ரிங் வேலை தினக்கூலி அடிப்படையில் செய்து வந்தார். எனது திருமணத்தின் போது போடப்பட்ட நகைகளின் விவரம் என்ன என்றால் 3 பவுண் நெக்லஸ், 3 பவுண் ஆரம், 2 பவுண் கம்மல் ஜிமிக்கி மற்றும் 1ம் எதிர் மனுதாரருக்கு 1 பவுண் மோதிரம், 1 பவுண் செயின் ஆகியவைகள் மற்றும் வாகனம் எடுத்துக்கொள்ள 50,000/-ம் ரூபாயும், வீட்டு சாமான்கள் 75,000/-ம் ரூபாய்க்கு எடுத்து கொடுத்தார்கள். எனக்கு எனது வீட்டில் கொடுத்த சீர்வரிசைக்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணமான புதிதில் எனது கணவர் என்னை நன்றாக கவனித்துக்கொண்டாரா என்றால் கவனித்துக்கொண்டார். எத்தனை நாட்கள் நல்லமுறையில் என்னை கவனித்தார் என்றால் திருமணமாகி 2 வருடங்கள் வரை நன்றாக பார்த்துக்கொண்டார் அதன்பின்னர் குடித்துவிட்டு வந்து அடிப்பார். திருமணமாகி 2 வருடத்திற்குள் எனக்கு முதல் குழந்தை பிறந்துவிட்டது என்றால் சரிதான். என்னுடைய இரண்டாவது குழந்தை எப்போது பிறந்தது என்றால் 2011ம் ஆண்டு பிறந்தது. என்னுடைய முதல் குழந்தை சகாய விமலி எங்கு பிறந்தது என்றால் ஜிப்மர் மருத்துவமனையில் பிறந்தது, பின்னர் என்னுடைய அம்மாவின் வீட்டிற்கு அழைத்துச்சென்றனர். என்னுடைய முதல் குழந்தை பிறந்து நான் எவ்வளவு நாட்கள் என்னுடைய அம்மாவின் வீட்டில் இருந்தேன் என்றால் சுமார் 3 மாதங்கள் இருந்தேன். 2வது குழந்தை பிறந்த பின்னர் என்னுடைய அம்மாவின் வீட்டில் இருந்தேனா என்றால் இல்லை என்னுடைய மாமியார் வீட்டில் ஆலப்புத்தூர் கிராமத்தில்தான் இருந்தேன். நான் ஆலப்புத்தூர் கிராமத்தில் மட்டும்தான் வசித்தேனா அல்லது

செங்கத்தில் குடியிருந்தேனா என்றால் சிறிது காலம் ஆலப்புத்தூரில் இருந்தது அதன் பின்னர் செங்கத்தில் வாடகை குடியிருப்பில் சில காலம் இருந்தேன். செங்கத்தில் எத்தனை வாடகைக் குடியிருப்பில் இருந்தேன் என்றால் 2 அல்லது 3 வீடுகளுக்கு மாறினேன். அந்த சமயத்தில் எனது கணவர் என்னை நல்ல முறையில் பார்த்துக்கொண்டாரா என்றால் பார்த்துக்கொண்டார். மேலும் குழந்தைகளை நல்லமுறையில் பராமரித்தாரா என்றால் பராமரித்து வந்தார். என்னுடைய தங்கையை எனது கணவரின் தம்பி தான் திருமணம் செய்துகொண்டாரா என்றால் சரிதான். 2011 மற்றும் 2012ம் வருடங்களில் நான் எனது கணவருடன் வாழ பிடிக்காமல் எனது அம்மாவின் வீட்டிற்கே என்னுடைய சீர்வரிசை சாமான்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்